இறங்கியிருப்பார்கள். அவர்கள் மதுரைக்கும் செல்வார்கள் திருநெல்வேலி பஸ்ஸும் செல்கிறது. கன்னியாகுமரிக்கும் செல்கிறது. பல்வேறு ஊர்களுக்குச் செல்கிறது. ஆக திருச்சியிலே இறங்கித்தான் செல்ல வேண்டும் என்று கட்டாயம் கிடையாது. ஏதாவது வேலையிருந்தால் போகின்றவர்கள் வேண்டுமானால் திருச்சியிலே இறங்கிச் செல்லலாமே தவிர தென் மாவட்டங்களுக்குப் போகின்றவர்கள் எல்லாம் அங்கே இறங்குவது இல்லை. இருந்தாலும் பொதுப்பணித் துறை அமைச்சரை பொறுத்தமட்டிலே, திருச்சியிலே இறங்கிப்போகிறார் மதுரையிலே இறங்கிப் போகிறார் என்பது எல்லாம் பிரச்சினை அல்ல. நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல் எங்கு வேண்டுமானாலும் இறங்கிச் செல்லலாம். திருச்சியிலே சென்று எங்காவது போகவேண்டுமானால் திருச்சியிலே இறங்கிச் செல்கிறார்கள். அதை ஒரு காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இருந்தாலும் நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும். திருச்சியைப் பொறுத்தமட்டில், அந்த நகரத்தினுடைய முக்கியத்துவத்தை இந்த அரசு நன்றாக அறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வருங் காலத்திலே அதற்கான பணிகள் திட்டமிடப்பட்டு செயலாக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 394, டாக்டர் எம். பி. சேகர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

394—

பெரம்பூரில் மழைக் காலங்களில் மழை நீர் தேங்குதல்:

*9844—டாக்டர் எம். பி. சேகர்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரம்பூரில் மழைக் காலங்களில் மழைநீர் தேங்காமல் இருக்க வடிகால் வாரியம் துரிதமாகச் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1993 ஏப்ரல் 19]

1991-92-ல் ரூ. 14.39 இலட்சம் செலவில் ஆறு மழை நீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன. 1992-93-ல் ரூ. 18.51 இலட்சம் செலவில் நான்கு இடங்களில் மழைநீர் வடிகால்வாய்கள் புதிதாகக் கட்டுவதன் மூலம் பெரம்பூர் தொகுதியில் மழைநீர் தேங்காமல் துரிதமாக வடிய வாய்ப் பிருக்கிறது. இந்த கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

முற்பகல் 10-55

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மழைக்காலத்தில் எழுப்பப்பட்ட வினா ஆகும். மழைக் காலத்தில், பல ஆண்டுகளாக, அதாவது 30 ஆண்டுகளுக்கு மேல் பெரம்பூர் ரெயில்வே மேம் பாலத்தின் கீழ் மழைநீர் தேங்கி, போக்குவரத்து முழு வதும் தடைபட்டுப் போகும். அதை நீக்கி, நிரந்தர பம்ப் செட் அமைத்துக் கொடுத்த நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைக் கூறி மற்றும் பெரம்பூரில் பல இடங்களில், குறிப்பாக குடிசைப் பகுதிகள் உள்ள வியாசர்பாடி, எம். எம். கார்டன், எம்.பி.கே. நகர், பி. எஸ். மூர்த்தி நகர், எம். ஜி. ஆர். நகர், தாமோதர் நகர் மற்றும் இதுபோன்ற பல இடங்களில் இன்னும் storm water drain and sewerage drain போன்ற வைகளை இன்னும் விரிவாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டு சென்னை மாநகர் முழுவதும் இதுபோன்ற பல்வேறு திட்டங் களைச் செயல்படுத்துவதற்காக ரூ. 20 கோடி மதிப்பீட்டிலே திட்டங்கள் தயாரிக்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டங்கள் நிறைவேறுகிற நேரத்தில் சென்னை மாநகரில் இதுபோன்ற பிரச்சினைகள் எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 395, திரு. நா. சா. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 396, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS